பதிவு அஞ்சலில் ஒப்புகை அட்டையுடன்

**தமிழ்நாடு பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள், சென்னை–28.**
**முன்னிலை: திரு.ம.ப. சிவன் அருள், இ.ஆ.ப.**
**<u>எண்.39446/கே2/2021 நாள்.13.01.2022</u>**

பொருள்: பொதுப்பணி – பதிவுத்துறை – திரு.பெ.ஆறுமுகம், அலுவலக உதவியாளர், இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகம், நாமக்கல் பதிவு மாவட்டம் – பணியிலிருக்கும் போது 04.04.2021 அன்று மறைவு – வாரிசு (மனைவி) திருமதி.ஆ.ஆனந்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் – ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை: மாவட்டப்பதிவாளர், நாமக்கல் கடித எண். 3146/அ1/2021, நாள்.06.10.2021. (உடன் வரப்பெற்ற திருமதி.ஆ.ஆனந்தி மனு நாள்.28.06.2021)
2. பதிவுத்துறை தலைவர் கடித எண்.33249/கே2/2018, நாள்.02.08.2018.
3.அரசாணை (Ms) எண்.382, நிதி (CMPC) துறை, நாள்.24.10.2020.

---

**<u>ஆணை:</u>**

பதிவுத்துறையில், நாமக்கல் பதிவு மாவட்ட இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில், அலுவலக உதவியாளராக பணிபுரிந்து கொண்டிருந்தபோது, பணிக்காலத்தில், 04.04.2021 அன்று இறப்பற்ற திரு.பெ.ஆறுமுகம் என்பவரின் வாரிசுதாரர் (மனைவி) திருமதி.ஆ.ஆனந்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி நியமனம் கோரி அளித்திருந்த பார்வை–1ல் காணும் மனு, கல்வித்தகுதி சான்று, குடும்ப வறிய நிலை, பணியின்மை, சொத்து மற்றும் வருமானம் குறித்த வட்டாட்சியரின் சான்றுகள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. திருமதி.ஆ.ஆனந்தி, இளநிலை உதவியாளர் பதவிக்குரிய கல்வித்தகுதி பெற்றுள்ளார். தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப் பிரிவு 20(6)(b) ல் கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார். இதனடிப்படையில், மேற்குறித்த சட்டப் பிரிவு 71–ன் கீழ் தனியரை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமித்தும், தனியருக்கு திருப்பூர் பதிவு மாவட்டத்தில் பணி நியமனம் வழங்கியும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. இவருக்கு பணியிட நியமன ஆணை சம்மந்தப்பட்ட மாவட்ட பதிவாளரால் பிறப்பிக்கப்படும்.

3. இவர் பணியில் சேரும் நாள் முதல் புதிய ஊதிய விகிதம் ரூ.19500/– (நிலை 8–ல் ஆரம்ப ஊதியம்) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

4. தனியரின் கல்வி மற்றும் இதர சான்றிதழ்களின் உண்மைத்தன்மைக்குட்பட்டே தனியரின் பணி வரன்முறைப்படுத்தப்படும். சான்றிதழ்களில் ஏதேனும் குறை அல்லது உண்மையற்றது எனக் கண்டறியப்படின் எந்த நேரத்திலும் தனியர் பணியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவார்.

5. தமிழ்நாடு அரசில் பணிபுரியும் 'சிவில் சர்ஜன்' நிலைக்கு குறையாத அரசு மருத்துவ அலுவலரிடம் உரிய படிவத்தில் உடற்தகுதிச் சான்று பெற்றளித்த பின்பு அவரது அசல் கல்விச் சான்றுகளைச் சரிபார்த்து பணியில் சேர அனுமதிக்குமாறும், பணியில் சேர்ந்த நாள் விவரத்தினை உடன் தெரிவிக்குமாறும் திருப்பூர் மாவட்ட பதிவாளர் கோரப்படுகிறார்.

6. இவ்வாணை கிடைக்கப் பெற்றதற்கான ஒப்புகையினை மறுதபாலில் அனுப்பி வைக்குமாறு தனியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்./-13.01.2022
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

பெறுநர்
திருமதி.ஆ.ஆனந்தி,
க/பெ.(லேட்) திரு.பெ.ஆறுமுகம்,
82, மேற்குத்தெரு,
நாமகிரிப்பேட்டை (P.O.),
இராசிபுரம் (T.K.)
நாமக்கல் மாவட்டம்.

நகல்:
1.மாவட்டப்பதிவாளர், நாமக்கல்/திருப்பூர்.
2.துணைப்பதிவுத்துறைத்தலைவர், சேலம் /கோயம்புத்தூர்.
3.சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்.
4.முக்கிய ஆணைக்கோப்பு / தனிநகல் –2.

திருப்பூர் நிருவாக மாவட்டப்பதிவாளர் (உ.ப.து.த நிலை) அவர்களின்செயல்முறைஆணை

பிறப்பிப்பவர்: திரு.இரா.இராமசாமி, எம்.எஸ்.சி., எம்.பில்.,

ந.க எண்.497/அ1/2022, நாள்.01.02.2022

பொருள்: பொதுப்பணி – பதிவுத்துறை – திரு.பெ.ஆறுமுகம், அலுவலக உதவியாளர், இராசிபுரம் சார்பதிவகம், நாமக்கல் பதிவு மாவட்டம் – பணியிலிருக்கும் போது 04.04.2021 அன்று மறைவு – வாரிசு (மனைவி) திருமதி.ஆ.ஆனந்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணியிட நியமனம் செய்து – ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை:

1. பதிவுத்துறைத்தலைவர் அவர்களின் ஆணை எண்.39446/கே2/2021, நாள்.13.01.2022.
2. மாவட்டப்பதிவாளர், நாமக்கல் கடித எண்.3146/அ1/2021 நாள்.06.10.2021 உடன் வரப்பெற்ற திருமதி.ஆ.ஆனந்தி மனு நாள்.28.06.2021.
3. சென்னை பதிவுத்துறைத்தலைவர் கடித எண்.33249/கே2/2018, நாள்.02.08.2018.
4. அரசாணை (Ms) எண்.382, நிதி (CMPC) துறை, நாள்.24.10.2020.

**ஆணை:**

பொருள் தொடர்பாக பார்வை(1)–இல் காணும் பதிவுத்துறைத்தலைவர் அவர்களின் ஆணையின்படி நாமக்கல் பதிவு மாவட்டம் இராசிபுரம் சார்பதிவகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து கொண்டிருந்தபோது, பணிக்காலத்தில் 04.04.2021 அன்று மறைவுற்ற திரு.பெ.ஆறுமுகம் என்பவரின் வாரிசுதாரர் (மனைவி)திருமதி.ஆ.ஆனந்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் திருப்பூர் பதிவு மாவட்டத்திற்கு பணி நியமனம் வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆணையில் தெரிவித்தப்படி தனியரை திருப்பூர் 2 எண் இணை சார்பதிவகத்தில் இளநிலை உதவியாளராக பணியிட நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. இவர் பணியில் சேரும் நாள் முதல் புதிய ஊதிய விகிதம் ரூ.19500/-(நிலை 8-ல் ஆரம்ப ஊதியம்) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறத்தகுதியுடையவர் ஆவார்.

3. தனியர் பணியில் சேரும் முன் தமிழ்நாடு அரசில் பணிபுரியும் 'சிவில் சர்ஜன்' நிலைக்கு குறையாத அரசு மருத்துவ அலுவலரிடம் உரிய படிவத்தில் உடற்தகுதிச்சான்றும் மற்றும் தனியரின் அசல் கல்விச்சான்றுகளையும் கொண்டு வருமாறும் தெரிவிக்கப்படுகிறது.

1/2/22

மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்),
(உ.ப.து.த நிலை),
திருப்பூர்.

1/2/22

பெறுநர்:

திருமதி.ஆ.ஆனந்தி,
க/பெ.(லேட்) திரு.பெ.ஆறுமுகம்,
82, மேற்குத்தெரு, நாமகிரிப்பேட்டை(po),
இராசிபுரம்(TK), நாமக்கல் மாவட்டம்.
(பதிவஞ்சலில் ஒப்புகை அட்டையுடன்)

நகல்:

1. பதிவுத்துறைத்தலைவர் அவர்கள்,
   சென்னை.(பணிந்து சமர்பிக்கப்படுகிறது)
2. துணைப்பதிவுத்துறைத்தலைவர் அவர்கள்,
   கோவை. (பணிந்து சமர்பிக்கப்படுகிறது)
3. மாவட்டப்பதிவாளர்(நிர்), நாமக்கல்
4. மாவட்ட கருவூல அலுவலர்,
   திருப்பூர்.
5. அ1 இருக்கை